செய்தி வெளியீடு எண்: 1021 நாள்: 25.12.2009

**<u>மதுரை மாவட்டம் ஆலம்பட்டி கிராமத்தில் கிணற்றில் விழுந்து இறந்துபோன பெண்ணின் இரண்டு குழந்தைகளின் எதிர்காலத்திற்காக தலா 1 இலட்சம் ரூபாய் வீதம் 2 இலட்ச ரூபாய் நிதியுதவி!</u>**

# <u>முதலமைச்சர் கலைஞர் ஆணை!</u>

மதுரை மாவட்டம், மேலவளவு அருகில் உள்ள ஆலம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. செந்தூரரான் என்பவரின் மகளும், திரு. நாகராஜன் என்பவரின் மனைவியுமான தேன்மொழி கிணற்றில் குளிக்கச் சென்றபோது தவறிவிழுந்து இறந்துவிட்டார். அவர் இறந்ததும், மனைவியுடன் வாழ்ந்து வந்த கணவர் திரு. நாகராஜன் தமது சொந்த ஊர் சென்றுவிட்டார். அதனால், இறந்துபோன தேன்மொழியின் குழந்தைகளான பவதாரிணி (வயது 3), அன்புராஜ் (வயது 2) ஆகிய இருவரும் தற்போது தேன்மொழியின் தந்தை செந்தூரரான் என்பவரின் பராமரிப்பில் உள்ளனர்.

திரு.செந்தூரரான் விவசாயக் கூலி வேலைகள் செய்துவருவதால் தமது பேரக் குழந்தைகளைப் பராமரிக்க இயலாத நிலையில் மிகவும் சிரமப்படுவதாகவும், குழந்தைகளை வளர்ப்பதற்காக அவருக்கு நிதியுதவி வழங்கலாம் என்றும், மத்திய உரம் மற்றும் இரசாயனத் துறை அமைச்சர் திரு. மு.க. அழகிரி அவர்கள் அளித்துள்ள கோரிக்கையை ஏற்று; தாயை இழந்து தவிக்கும் இரண்டு குழந்தைகளின் பராமரிப்புக்காக அவர்கள் இருவருக்கும் தலா 1 இலட்சம் ரூபாய் வீதம் 2 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். இந்த நிதியை வங்கியில் டெபாசிட் செய்து, அதன்மூலம் வரும் வட்டியைக் கொண்டு அக்குழந்தைகளை வளர்த்து ஆளாக்கலாம் என்றும் முதலமைச்சர் கலைஞர் இந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளார்.

• * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.